1971 ஜூலை 29]

* 482 வினா—திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் ஜில்லா, அருப்புக்கோட்டை தாலுக்கா, வாகைக்குளம் கண்மாய்க்கு நாராயணக் காவேரியில் இருந்து வரும் வரத்துக்கால்வாயை (Supply channel) உடனடியாக வெட்டிச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அவ்வேலை எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

கடைநிலை ஊழியர்களுக்குக் குடியிருப்பு

* 483 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் (Government Estate) கடைநிலை ஊழியர்களுக்கு மேலும் வீடு கட்டித்தர செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை, ஐயா.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, கடைநிலை ஊழியர்களுக்கு அரசாங்க எஸ்டேட்டில் போதிய அளவில் வீடுகள் கட்டவில்லை என்றாலும் வீட்டுவசதி வாரியம் கட்டும் வீடுகள் கணிசமான எண்ணிக்கையில் ஒதுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியை வீட்டு வசதி அமைச்சருக்குப் போடலாம்.

திரு. நா. வீராசாமி : கடைநிலை ஊழியர்களுக்கு வீடு கட்டும் திட்டம் இல்லையென்று சொன்னார்கள். இப்போது கூவம் ஆற்றங்கரை ஓரத்தில் அவர்களுக்கு இடத்தை ஒதுக்கி அந்த ஊழியர்கள் வீடு கட்டிக் கொள்ள அரசாங்கம் வழி வகுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் கடைநிலை ஊழியர்களுக்கு வீடு கட்டப்படுமா என்ற மூலக் கேள்விக்கு இல்லையென்று பதில் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல் கூவம் ஆற்றங்கரையில் இப்போது வீடு கட்டும் திட்டம் ஒன்றும் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் கடைநிலை ஊழியர்களுக்கு வீடு கட்டும் திட்டம் இல்லையென்று சொன்னார்கள். இப்போது எவ்வளவு கடைநிலை ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது? எவ்வளவு கடைநிலை ஊழியர்களுக்கு வீடு இல்லை? அதுபற்றி விவரம் தயாரிக்கப்பட்டிருக்கிறதா? எப்போது அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் நிறைவேறும்?